மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கருத்தைப் பற்றியும் மத்திய அமைச்சர்களுக்கும், மத்திய அமைச்சகத்திற்கும், வானொலித் துறைக்கும் தகவலைத் தெரிவிக்கும் இந்த அரசு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, வினா 599.

திரு. மு. அம்பிகாபதி : தலைவரவர்களே, எங்கள் கட்சியிலிருந்து ஒருவருக்குக்கூட குறிப்பிட்ட இந்த வினாவில் துணைக் கேள்விக்கு வாய்ப்புத் தரவில்லை; இது முக்கியமான வினா. எங்களுக்கு வாய்ப்புத் தரும் வரையில் நான் உட்கார மாட்டேன்.

(முற்பகல் 9-40)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்த கேள்விக்கு நிறைய நேரம் ஒதுக்கிவிட்டேன். மேலும், நேரம் ஒதுக்குவதற்கில்லை. நீங்கள் உட்கார மறுத்தால் உங்கள் கட்சித் தலைவர் உங்களைக் கட்டுப்படுத்திக்கொள்வார். தயவுசெய்து உட்காருங்கள். அடுத்து வினா 599.

அரசுப் பண்ணைகளில் விதை உற்பத்தி செய்தல்.

*வினா எண் 599—திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழக விவசாயிகளுக்குத் தேவையான அனைத்து விதைகளை அரசுப் பண்ணைகளிலேயே உற்பத்தி செய்து அளிக்க அரசிடம் செயற்குறிப்பு ஏதேனும் உண்டா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : இல்லை.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் தமிழக விவசாயிகளுக்குத் தேவையான அனைத்து விதைகளையும் அரசுப் பண்ணைகளிலே உற்பத்தி செய்யும் செயற்குறிப்பு இல்லை என்று சொன்னார்கள். இந்த மாநிலத்து விவசாயிகளுக்குத் தேவையான விதைகளில் எத்தனை விழுக்காடு அரசுப் பண்ணைகள் மூலம் விநியோகம் செய்யப்படுகிறது? எத்தனை விழுக்காடு தனியார் பண்ணைகள் மூலம் விநியோகம் செய்யப்படுகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, நெல், சோளம் விதைகளில் 7 சதவீதம், கேழ்வரகு 15 சதவீதம், வீரிய ஒட்டு சிறுதானியங்கள் 30 சதவீதம்—இந்த அளவில் அரசு விதைப் பண்ணைகள் மூலம் விதைகள் விவசாயிகளுக்கு விற்பனைச் செய்யப்படுகிறது. எஞ்சியவை தனியார் விதை உற்பத்திப் பண்ணைகளில் உற்பத்தி செய்யப்படுகிறது.

1981 ஏப்ரல் 2]

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: தலைவரவர்களே, ஒன்றிய அளவில் இருக்கிற விவசாயிகளுக்கு நிலக்கடலை விதை தனியாரிடமிருந்து வாங்கி விநியோகம் செய்யப்படுகிறது. அதனால் அந்த விதைகள் முளைக்கும் திறன் குறைவாக இருக்கிறது. ஆகையால், முளைக்கும் திறன் குறைவாக உள்ள விதைகளை ''பர்ச்சஸ்'' பண்ணும் அதிகாரிகள் அதற்கு பொறுப்பு ஏற்கும் வகையில் நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, எண்ணெய் விதைகளுக்கு என்று புதிதாக இயங்கும் இயக்கம் இது பற்றி ஆராயும்,

திரு. ஆ. வெள்ளைச்சாமி : தலைவரவர்களே, நம்முடைய விவசாயிகளுக்குத் தேவையான அனைத்து விதைகளையும் அரசுப் பண்ணைகள் மூலம் விநியோகம் செய்வார்களா என்று கேட்டதற்குத் தனியார் விதைப் பண்ணைகளிலிருந்தும் விதைகளைப் பெற்று அரசு விநியோகிப்பதாகச் சொன்னார்கள். எந்த அடிப்படையில் தனியாரிடம் இருந்து விதைகளைப் பெற்று விநியோகிக்கிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, அரசுப் பண்ணைகள் மூலம்தான் விதைக் காய் உற்பத்திச் செய்யப்படுகிறது. அதன் பிறகு அதைத் தனியார் பண்ணைகளுக்குக் கொடுத்துத் தேவையான அளவுக்கு உற்பத்திச் செய்யச் சொல்லி அந்த விதைகளை அரசு பெற்று, அதற்குச், சான்றளிப்பும் பெற்று, விற்பனைச் செய்யப்படுகிறது.

திரு. கா. கோபாலகிருஷ்ணன் : தலைவரவர்களே, அரசுப் பண்ணைகளில் குறைந்த அளவு விதைகளே உற்பத்திச் செய்யப்படுகின்றன. ஆகையால், விவசாயிகளுடைய முழுத் தேவையையும் பூர்த்தி செய்ய அரசு விவசாயப் பண்ணைகளே வாங்கி, அதைச் சோதனை செய்து, விவசாயிகளுக்கு வழங்கக்கூடிய முறையை அரசு ஏற்படுத்துமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, நமக்கு உள்ள நிதி ஆதாரம், இந்த விதைப் பண்ணைகளின் பரப்பளவு ஆகியவைகளை ஒட்டித்தான் நாம் விதைகளை உற்பத்திச் செய்கிறோம். ஆகவே, நம் மாநிலத்திற்குத் தேவையான அனைத்து விதைகளையும் உற்பத்திச் செய்யும் சாத்தியக்கூறு இல்லை.

திரு. பி. எம். தங்கவேல்ராஜ் : தலைவரவர்களே, ஊராட்சி ஒன்றியங்கள் மூலம் விதைகள் விநியோகிக்கப்படுகின்றன. ஆனால் விதைகளை விநியோகம் செய்யும்போது அவை சரியாக

வழங்கப்படவில்லை. ஆகவே, ஊராட்சி ஒன்றியங்கள் மூலம் விதைகள் தேவையான அளவுக்கு, தேவைப்படுகிற நேரத்தில் தரமான விதைகளை அந்தந்த சமயத்தில் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, இதுபோன்ற குறைகளை அகற்ற அரசு ஆராயும்.

திரு. பொ. உத்திராபதி : தலைவரவர்களே, நமது விவசாயப் பண்ணைகள் மூலம் கொடுக்கக்கூடிய விதைகள் ஆனாலும் தனியார் பண்ணைகள் மூலம் கொடுக்கக்கூடிய விதைகள் ஆனாலும் விவசாயிகள் அவைகளைப் பெற்று விவசாயம் செய்வது சிரமமாக இருக்கிறது. குறிப்பாக தஞ்சை மாவட்டத்தில் இப்படிப்பட்ட குறைபாடு அதிகமாக இருக்கிறது. சிறு விவசாயிகளுக்கு இந்த விதைகளைக் கொடுக்கும்போது பாதி விலையாகவும் பாதி மானியமாகவும் கொடுக்க எதிர்காலத்தில் அரசு பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, எதிர்காலத்தில் இதை பரிசீலிக்கலாம்.

திரு. இரா. சண்முகம் : தலைவரவர்களே, தனியார் உற்பத்தி செய்கின்ற விதைகளுக்கு அரசு தரப்பிலே கிடைக்கின்ற பணம் விரைவில் கிடைக்காத காரணத்தால் விதை உற்பத்தி செய்து தருவதற்கு விவசாயிகள் மறுக்கிறார்கள். ஆகவே விவசாயிகளிடமிருந்து ஒரு குறிப்பிட்ட காலத்தில் விதைகளைப் பெற்றுக் கொண்டு பணம் கொடுப்பதற்கு அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, அரசு முன்வரும்.

முல்லுவாடியிலுள்ள எண்ணெய் மூலவிதைப் பண்ணை.

* வினா எண் 600—திரு. ஏ. எம். சேதுராமன் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்—கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆற்காடு தாலுக்காவில் உள்ள முல்லுவாடி கிராமத்தில் நிறுவப்பட்டிருக்கும் (செயலற்ற நிலையில் உள்ள) எண்ணெய் மூலவிதைப் பண்ணையைச் செயல்படுத்த துரித நடவடிக்கை எடுக்கப்படுமா?

(ஆ) மேலும் அதை விஸ்தரிக்கும் எண்ணம் ஏதேனும் அரசுக்கு உண்டா?